# பின்னிணைப்புக்கள்

# பின்னிணைப்பு I

(அ) 1970இல் இலங்கை நாடாளுமன்றத்தினது முக்கிய சட்ட ஆக்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய பகுதிகள்.

(ஆ) 1970ஆம் ஆண்டில் நாணயச் சபை மேற்கொண்ட முக்கிய நிருவாக நடவடிக்கைகள்.

## (அ) மத்திய வங்கியினதும் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய வங்கிநிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றி 1970ஆம் ஆண்டின் முக்கிய சட்டவாக்கங்கள்

*1970ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கமத்தொழில், கைத்தொழில், கொடுகடன் கூட்டுத்தாபன (திருத்த)ச் சட்டம்*

**கைத்தொழில், கமத்தொழில், கொடுகடன் கூட்டுத்தாபனக் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*(இசைவுத் திகதி 1970 சனவரி 27)*

*1. இச்சட்டமானது 1970ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கமத்தொழில், கைத்தொழில், கொடுகடன் கூட்டுத்தாபனத் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. கமத்தொழில், கைத்தொழில், கொடுகடன் கூட்டுத் தாபனக் கட்டளைச் சட்டத்தின் 51ஆம் பிரிவானது அப்பிரி வின் (1)ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (ங) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது :—*

*''(ஙங) அரசாங்கத்திடமிருந்து. இலங்கை மத்திய வங்கியிடமி ருந்து அல்லது அத்தகைய வங்கியின் நாணயச் சபை யினுல் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் மூலத்திலி ருந்து, கூட்டுத்தாபனத்திற்கும் அரசாங்கத்திற்கும் அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய வங்கிக்கும் அல் லது அத்தகைய வேறு மூலத்திற்குமிடையேயான உடன் படிக்கையினுற்றீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்த கைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும் பணத் தைக் கடனுகப் பெறுவதற்கு அல்லது பண வைப்புக் களை ஏற்றுக்கொள்வதற்கு;''.*

# 1970ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு வங்கித் (திருத்தச்) சட்டம்

*இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இசைவுத் திகதி 1970 சனவரி 27*

1. இச்சட்டமானது 1970 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு வங்கித் (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

2. இனிமேல் இச்சட்டத்தின் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடப்படும் (1968ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கச் சட்டத்தினாற்றிருத்தப்பட்டவாறான) இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது, "கடன்" என்னும் பதத்தின் வரைவிலக்கணத்தின் "வேறெந்தப் பெயரோ குறிப்புப் பெயரோ கொண்டு அழைக்கப்படும்......... உள்ளடக்கும்;" என்னுஞ் சொல்லமைப்புக்குப் பதிலாக "வேறெந்தப் பெயரோ குறிப்புப் பெயரோ கொண்டு அழைக்கப்படும் ...... உள்ளடக்கும்; ஆனால் வங்கியின் பணியாட்டொகுதிக்கான எவையேனும் சம்பள முற்பணங்களை உள்ளடக்காது;" என்னுஞ் சொல்லமைப்பினையிடுதன் மூலம் மேலும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது.

> 10. பணிப்பாளரொவ்வொருவரும் சாதாரணமாக, மூன்றாண்டுக் காலமொன்றிற்கு நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன், அவர் அக்காலம் முடியுமுன்னரே இறந்தால், ஒய்வுபெற்றால் அல்லது அகற்றப்பட்டால் அல்லது தகுதியற்றவராக்கப்பட்டாலொழிய அக்காலத்துக்குக்குப் பதவி வகித்தல் வேண்டும்".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடப்படுவதன் மூலமும் —

> "(1) காரணமெதுவும் காட்டாது அமைச்சர் பணிப்பாளர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்". அத்துடன்

(ஆ) அப்பிரிவின் 4ஆம் உட்பிரிவிலுள்ள "நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் என்ற கூற்றுகளுக்குப் பதிலாக "மூதவையுறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் எவரும்" என்ற கூற்றைப் பதிலிடுவதன் மூலமும்

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப் படுகின்றது; அது அச்சட்டவாக்கத்தின் 17 அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும்.

> 17அ. மத்திய வங்கியின் நாணயச் சபையுடன் கலந்தாலோசித்தபின்னர் அமைச்சர் கொள்கை சார்பான கருமங்கள்மீது சபைக்குப் பொதுவான பணிப்புக்களை விடுக்கலாம்.''

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, ''படிகளையும் காலத்துக்குக் காலம் நிர்ணயித்து வேறுபடுத்தலாம்'' என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக ''படிகளையும் இதையடுத்துவரும் இச்சட்டவேற்பாடுகளுக்கமையக் காலத்துக்குக்காலம் நிர்ணயித்து வேறுபடுத்தலாம்'' என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

7. (1) (1968ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கச் சட்டத்தினுல் உட்புகுத்தப்பட்ட) முதன்மைச் சட்டவாக்கத்தின் 70ஆ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், ''ஆதிச் சொந்தக்காரன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாகச் ''சொந்தக்காரன்'' என்னுஞ் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

(2) முதலாம் உட்பிரிவினுல் முதன்மைச் சட்டவாக்கத்திற் செய்யப்படும் திருத்தமானது எல்லா நோக்கங்களுக்காகவும் 1968, ஒகத்து 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

> '' (அ) உட்பிரிவு (1அ) இன் ஏற்பாடுகளுக்கமைய, வங்கியால் வேலைக்கமர்த்தப்படவுள்ள கீழடங்கு பணியாட்டொகுதி. அவர்களின் வேலை நிபந்தனைகள், உரிமைகள், கடமைகள், முன்னுரிமைகள் என்பனவற்றையும் அவற்ருேடு தொடர்புபட்ட வேறு எவையேனும் கருமங்களையும் விதித்துக்கூறல்;''; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினையுடனடுத்துப் பின்வரும் புதியவுட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

> ''(அ) உட்பிரிவு (1) இன் (அ) என்னும் பந்தியில் உள்ளது எதுவும், வங்கியின் பணியாட்டொகுதி தொடர்பில் 93 (1) ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும்

கருமங்கள் பற்றிய விதிகளை ஆக்கத் தத்துவமளிப்பதாகவோ அதிகாரமளிப்பதாகவோ கருதப்படலோ பொருள் கொள்ளப்படலோ வாகாது;'';

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினையிடுவதன் மூலமும் :—

''(அ) வங்கியினது பொது முகாமையாளரினதும் துணைப் பொது முகாமையாளரதும் தத்துவங்கள், கடமைகள், அவர்களது வேலை நிபந்தனைகள் என்பவற்றையும் அவற்றோடு தொடர்புபட்ட வேறு எவையேனும் கருமங்களையும் விதித்துக்கூறல்;'';

அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

''(இ) வங்கியின் பணியாட்டொகுதிக்குக் கொடுபடவேண்டிய சம்பளங்கள், மிகையூதியங்கள், வேறு படிகள் (அவை பயணப் படிகளாய், வாழ்க்கைப் படிகளாய் அல்லது வேறு படிகளாய் இருக்கலாம்) என்பவற்றை விதித்துக்கூறல்;''.

# 1970ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க ஊழியர் சேமநிதி (திருத்த)ச் சட்டம்

*1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமநிதிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*(இசைவுத் திகதி : 1970 மாச்சு 24)*

1. இச்சட்டமானது 1970 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஊழியர் சேமநிதி (திருத்த)ச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்திதன்மேல் ''முதன்மைச் சட்டம்'' எனக் குறிப்பிடப்படும் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமநிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது அப்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) '' கழித்தல் வேண்டும்;'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''7அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கழித்தல் வேண்டும்;'' என்ற சொற்களையிடுதன்மூலமும்; அத்துடன்

(ஆ) '' இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதில்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இச்சட்டத்தின்கீழ் அவர்களின் முறையான பணிகளைக் கொண்டுநடாத்துவதில்'' என்ற சொற்களையிடுதன்மூலமும்;''

3. முதன்மைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினையுடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது; அது அச்சட்டத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும் :—

> 7அ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதில் ஆணையாளரினால் உறப்படும் செலவுகள், இலங்கையின் திரட்டு நிதிக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் :
>
> ஆயினும், எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் V ஆம் பாகத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதில் ஆணையாளரினால் உறப்படும் செலவுகள் நிதியின் பணங்களை முதலீடு செய்வதனாற் பெறப்படும் வருமானத்திலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.''.

4. முதன்மைச் சட்டத்தின் 14ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (அ), (ஆ) என்னும் பந்திகளை விட்டுவிடுதன்மூலமும் ;

(2) அக்காப்புவாசகத்தின் (இ), (ஈ) என்னும் பந்திகளை அதன், (அ), (ஆ) என்னும் பந்திகளாக மீள எண்ணிடுதன் மூலமும்; அத்துடன்

(3) அக்காப்புவாசகத்தின் மீள எண்ணிடப்பட்ட (அ) என்னும் பந்தியில், —

(i) ''ஓராண்டிற்கு நூற்றுக்கு இரண்டரை வீதத்திலான வட்டி'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஓராண்டிற்கு நூற்றுக்கு இரண்டரை வீதத்திற்குக் குறையாத அத்தகைய வீதத்திலான வட்டி'' என்ற சொற்களையிடுதன்மூலமும்; அத்துடன்

(ii) ''அக்காலம் முடிவடையும் திகதியில்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''அக்காலம் முடிவடையும் திகதிக்கு நேர்முந்திய மாதத்தின் இறுதியில்'' என்ற சொற்களையிடுதன்மூலமும்.

# 1970ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க வரி தட்டிக்கழித்தலைத் தடுத்தல்

**வருமானவரியைத் திரட்டுவதற்காகச் சிறப்பு வழிவகைகள் கையாளப்படுவதை இயல்வதாக்குவதற்கும் அத்தகைய வரி செலுத்தாது விடுதல்மூலம் அரசிறைக்கேற்படும் நட்டத்தைத் தவிர்ப்பதற்கும் அத்தகைய சிறப்பு வழிவகைகளோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான பண நியாயப்பிரமாணச் சட்டத்துக்கான திரிபுகளைச் செய்வதற்குமானதொரு சட்டம்.**

*(இசைவுத் திகதி — 1970 நவெம்பர் 1)*

*வருமானவரி பாரதூரமாகப் பெருமளவில் செலுத்தப்படாது விடப்பட்டுள்ளபடியாலும் :*

*அத்தகைய செலுத்தாதுவிடுதற்கான ஒரு வழியாகப்பெரிய இனங்களைச் சேர்ந்த தாள் நாணயங்களைப் பதுக்கிவைத்தல் பெருமளவில் கையாளப்பட்டுவருகின்றபடியாலும் ;*

*அவ்விதம் செலுத்தாதுவிடப்பட்ட வரிகளைத் திரட்டுவதற்கென உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஏற்புடையதானபடியாலும் :*

*1. இச்சட்டமானது 1970ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க வரி தட்டிக்கழித்தலைத் தடுத்தற் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.*

*2. 1970, ஒற்ரோபர் 26ஆந் திகதி முதல் இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் ''பழந் தாள் நாணயங்கள்'' எனக் குறிப்பிடப்படும். 1970 ஒற்ரோபர் 26ஆந் திகதிக்கு முன்னரான திகதியைக்கொண்ட நூறு ரூபா, ஐம்பது ரூபா இனங்களைச் சேர்ந்த தாள் நாணயம் யாவற்றுக்கும் பண நியாயப் பிரமாணச் சட்டத்தின் 55, 56, 57ம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாதொழிதல் வேண்டும்.*

*3. (1) 1970, நவம்பர் 3ஆந் திகதியன்று பழந்தாள் நாணயம் யாவும் சட்டவழி நாணயப் பெறுமதியுடையதாதல் ஒழிதல்வேண்டும் என்பதோடு, இச்சட்டத்தினால் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிர, மத்திய வங்கியின் பொறுப்பாதல் ஒழிதல் வேண்டும் அதற்கிணங்க, அத்தகைய தாள் நாணயத்தை வைத்திருப்பவர் எவரும் நட்டஈடு எதற்கும் உரித்துடையவராகார்.*

*(2) நாலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1970, நவம்பர் 25 வரையும் அது உட்படவும் தமக்குச் சொந்தமான எவையேனும் பழந்தாள் நாணயங்களைத் தம் உடைமையில் வைத்திருக்கும் ஆளொருவர் மத்திய வங்கியினால் ஏற்பாடு செய்யக்கூடிய அத்தகைய படிவத்தில் எழுத்திலான வெளிப்படுத்தலொன்று இரட்டைப் படிகளில் ஆக்கப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டு அவ்விதம் திரும்ப ஒப்படைக்கப்படும் நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரம், அட்டவணைப் படுத்தப்பட்ட ஏதேனும் வங்கியிடம் அத்தகைய தாள் நாணயங்களை மீள ஒப்படைக்கலாம் அல்லது மீள ஒப்படைக்*

கச் செய்விக்கலாம். அத்தகைய வங்கியும் மத்திய வங்கியின் முகவர் என்ற தன்மையில் அவ்விதம் மீள ஒப்படைக்கப்படும் தாள் நாணயங்களை ஏற்கும்படி இத்தால் அதிகாரமளிக்கப் பட்டுப் பணிக்கப்படுகின்றது.

(3) அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதேனும் வங்கியிடம் (2) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பழந்தாள் நாணயங்களை ஆளெவரேனும் 1970, நவம்பர் 2 அன்று அல்லது அதன்முன்னர் மீள ஒப் படைக்குமிடத்து,

(அ) அவ்விதம் மீள ஒப்படைக்கப்படும் பழந்தாள் நாணயங் களின் பெறுமதி ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாவிடின், இயன்றளவு அவ்விதம் மீள ஒப்படைக்கப்பட்ட பழந் தாள் நாணயங்களின் அதே இனங்களைச் சேர்ந்த தாள் நாணயங்களினால் அத்தகைய கொடுப்பனவைச் செய்தல்மூலம் அவ்விதம் மீள ஒப்படைக்கப்பட்ட தாள் நாணயங்களின் பெறுமதியை அத்தகைய ஆளுக்குச் செலுத்துதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவ்விதம் மீள ஒப்படைக்கப்பட்ட தாள் நாணயங்களின் பெறுமதி ஓராயிரம் ரூபாவுக்கு மேற்பட்டால், இயன் றளவு அவ்விதம் மீள ஒப்படைக்கப்பட்ட பழந்தாள் நாணயங்களின் அதே இனங்களைச் சேர்ந்த தாள் நாணயங்களினால் அத்தகைய கொடுப்பனவைச் செய் தல்மூலம் ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு தொகையை அவ்வாளுக்குச் செலுத்துதல் வேண்டும். அவ்விதம் மீள ஒப்படைக்கப்பட்ட தாள் நாணயத்தின் பெறுமதியின் எஞ்சிய பகுதி அவ்வங்கியில் அவ்வாளின் வரவில் வைப்பிலிட்டு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) 1970, நவம்பர் 3இல் தொடங்கி 1970, நவம்பர் 25இல் முடிவடையும் காலத்தில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளெவ ராலும் பழந்தாள் நாணயங்கள் மீள ஒப்படைக்கப்படுதல் எதுவும் —

(அ) அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி ஒன்றில் மட்டுமே அத்தகைய ஆள் கணக்குடையவராயிருப்பின், அவ்வங் கிக்குச் செய்யப்படுதல் வேண்டும். அல்லது

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய வங்கியில் அத்தகைய ஆள் கணக்குகள் உடையவராயிருப்பின் அவரால் தீர் மானிக்கப்படக்கூடிய அத்தகைய ஏதேனும் ஒரு வங் கிக்கே செய்யப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாம், நான்காம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கிணங்க ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிக் குப் பழந்தாள் நாணயங்களை யாரேனுமாள் ஒப்படைத்திருக்கு மிடத்து, அத்தகைய வங்கி அத்தகைய தாள் நாணயங்களின் பெறுமதிக்குச் சமமான தொகையொன்றை அவரது கணக்கில் வரவுவைத்தல் வேண்டும்.

(6) 1970, நவம்பர் 3ஆந் திகதியன்று தொடங்கி 1970, நவம்பர் 25ஆந் திகதியன்று முடிவடையும் காலத்தின்போது யாரேனுமாள், அவர் கணக்கு வைத்திராத ஏதேனும் அட்ட

வணைப்படுத்தப்பட்ட வங்கிக்கு (2) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பழந்தாள் நாணயங்களை ஒப்படைத்திருக்குமிடத்து, அவ்வங்கி அத்தகைய தாள் நாணயங்களின் பெறுமதியினை அவ்வாளின் வரவில் இட்டுவைத்தல் வேண்டும்.

(7) ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி, அவ்வங்கிக்கு இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஒப்படைக்கப்பட்ட பழந்தாள் நாணயங்கள், எவரால் அல்லது எவரது சார்பில் அத்தகைய மீள ஒப்படைத்தல் செய்யப்பட்டதோ அவருக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் சொந்தமாகாதென ஏதேனும் ஐயுறவு கொள்ளுமாயின், அவ்வங்கி, ஒப்படைக்கப்பட்ட தாள் நாணயங்கள் அவ்வாளுக்குச் சொந்தமானவையெனத் திருத்திப்படும்வரை, அத்தகைய மீள ஒப்படைத்தல் தொடர்பில் அத்தகைய ஏற்பாடுகளின்கீழ் அது கொடுக்கவேண்டியுள்ள ஏதேனும் கொடுப்பனவை நிறுத்திவைக்கலாம்.

4. மூன்றும் பிரிவின்கீழ் அப்பிரிவினுல் தேவைப்படுத்தப்பட்டுள்ள இரட்டைப் படியிலான வெளிப்படுத்தலுடன் எவையேனும் பழந்தாள் நாணயங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கும் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி எதுவும் அத்தகைய வெளிப்படுத்தலின் ஒரு படியை உள்நாட்டரசிறை ஆணையாளருக்கு அனுப்புதல்வேண்டும். அத்துடன். அத்தகைய வெளிப்படுத்தலின் மற்றப் பிரதியை தன்வசம் வைத்திருத்தலும் வேண்டும்.

5 அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதேனும் வங்கிக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் பழந்தாள் நாணயங்களை மீள ஒப்படைத்துள்ள எவரேனுமாள் 1965, ஏப்பிரல் 1 ஆந் திகதி தொடங்கி 1970, மாச்சு 31 உடன் முடிவடையும் மதிப்பீட்டாண்டுகளின்பொழுது வருமானவரி அல்லது வேறு ஏதேனும் வரி செலுத்தாதுவிட்டமை எதனதும் தொடர்பில் உள்நாட்டரசிறை ஆணையாளருக்கு வெளிப்படுத்தலொன்றைச் செய்யலாம்.

பழந்தாள் நாணயங்களை மீள ஒப்படைக்கும் ஆட்களினுல் உள்நாட்டரசிறை ஆணையாளருக்குச் செய்யப்பட வேண்டிய வெளிப்படுத்தல்.

6. (1) ஐந்தாம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தலொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளையும் அந்த வெளிப்படுத்தலையும் உள்நாட்டரசிறை ஆணையாளர் ஆராய்ந்து பார்க்கலாம். அல்லது உள்நாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் அலுவலரைக்கொண்டு ஆராயப்படச் செய்தல் வேண்டும். அத்துடன், அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென அத்தகைய ஆளினுல் வெளிப்படுத்தப்பட்ட வருமானத்தின் 33 1/3 சதவீதத்திற்குச் சமமான ஒரு வரியை அறவிடுதல் வேண்டும்.

உள்நாட்டரசிறை ஆணையாளரால், தமக்குச் செய்யப்பட்டுள்ள வெளிப்படுத்தல்களின்மீது எடுக்கப்படும் நடவடிக்கை.

எவ்வாறுயினும், அவ்விதம் அறவிடப்படும் வரியின் தொகை அத்தகைய ஆளினுல் மீள ஒப்படைக்கப்பட்ட பழந்தாள் நாணயங்களின் பெறுமதியின் 50 சதவீதத்திற்குக் குறைந்ததாயிருக்குமிடத்து அப்பொழுது, அவ்விதம் அறவிடப்படும் வரி அத்தகைய ஆளினுல் மீள ஒப்படைக்கப்பட்ட பழந்தாள் நாணயங்களின் பெறுமதியின் 50 சதவீதமாதல் வேண்டும்.

மேலும், எவ்வாறேனும், அத்தகைய ஆள் 1965, ஏப்பிறல் 1 தொடங்கி 1970 மாச்சு 31 இல் முடிவடையும் காலத்தின் போதான ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்குத் தாம் வருமான வரி செலுத்தும் கடப்பாடுடையரென அச்சட்டத்தின் 81ஆம்

பிரிவின்கீழ் மதிப்பீட்டாளர் ஒருவருக்கு அறிவித்தல் கொடா திருக்குமிடத்து அல்லது அத்தகைய காலத்தின்போதிலான மதிப்பீட்டாண்டுகளுக்கு வருமான விபரத்திரட்டுச் சமர்ப்பிக் கும்படி மதிப்பீட்டாளர் ஒருவரால் அத்தகைய ஆள் பணிக் கப்பட்டிராவிடத்து, —

(அ) அக்காலத்தின்போது உள்ள அவரின் வருமானம் முழு வதன்மீதும் 33 1/3 சதவீதமான விகிதத்தில் வரி யொன்று அறவிடப்படுதல் வேண்டும். அல்லது

(ஆ) (அ) என்னும் பந்தியின்கீழ்க் கணிக்கப்படும் வரியின் தொகை அத்தகைய ஆளினல் மீள ஒப்படைக்கப்பட்ட பழந்தாள் நாணயங்களின் பெறுமதியின் 50 சதவீதத் திற்குக் குறைந்ததாயிருப்பின், அத்தகைய ஆளினல் மீள ஒப்படைக்கப்பட்ட பழந்தாள் நாணயங்களின் பெறுமதி யின் 50 சதவீதத்திற்குச் சமமான வரியொன்று அவ் வாளிடம் அறவிடப்படுதல் வேண்டும்;

(2) இப்பிரிவின் கீழான வரியை அறவிட்டுப்பெறும் நோக் கத்திற்காக, வருமானவரியை மதிப்பிடுதலும் அறவிடுதலும் தொடர்பிலான உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்தக்கூடிய அளவில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இச்சட்டம் ஆரம்பமாகும் திகதியின் முன்னர் அத்தகைய ஆள் வருமானம் பற்றி உண்மையில்லாத விவரத்திரட்டொன் றினைச் செய்துள்ளாரென மதிப்பீட்டாளர் நம்புவதற்குக் கார ணம் இருந்திருப்பதுடன், அத்தகைய விவரத்திரட்டிலிருந்து எழும் விடயங்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டும் இருப்பின் அல்லது 5 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்த லொன்று முதலீடு செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் வருமா னத்தை உள்ளடக்கியிருப்பின் அத்தகைய முதலீட்டின் அள வுக்கு அவ்வாள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா.

7. இச்சட்டத்தின்கீழ் அட்டவணைபடுத்தப்பட்ட ஏதேனும் வங்கியினல் எவரேனும் ஆளின் வரவில் ஏதேனும் பணத் தொகை வைப்பில் வைத்திருக்குமிடத்து, அத்தகைய வைப் புச்செய்யப்பட்ட திகதியின் பின்னர் மூன்று தெளிவான வேலை நாட்கள் கழியும்வரை அத்தகைய தொகை முழுவதையேனும் ஏதேனும் பாகத்தையேனும் அத்தகைய ஆள் மீளப் பெறு தற்கு அத்தகைய வங்கி அனுமதித்தலாகாது.

8. இச்சட்டத்தின்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதேனும் வங்கியில் எவரேனும் ஆளின் வரவுக்கு வைப்பில் வைத்திருக் கப்படும் ஏதேனும் பணத்தொகை, 7 ஆம் பிரிவின் ஏற்பாடு களுக்கிணங்கவேயல்லாது வேறுவகையாக அத்தகைய வங்கி யினல் கொடுப்பனவு மறுக்கப்படுமிடத்து அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்குமிடத்து, வைப்பில் அவ்விதம் வைத்திருக் கப்படும் அப்பணத்தை அறவிடுவதற்கெனச் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கெதிராக அத்தகைய ஆள் வழக்கொன் றைத் தொடரலாம், அத்தகைய ஏதேனும் வழக்கில் அத் தகைய வைப்பு எந்தத் தாள் நாணயங்கள் தொடர்பானதோ அத்தகைய இச்சட்டத்தின்கீழ் மீள ஒப்படைக்கப்பட்ட தாள் நாணயங்கள் அத்தகைய ஆளுக்குச் சொந்தமானவை என் பதை நிரூபிக்கும் பொறுப்பு வழக்காளியின் மேலதாகும். அத் தகைய வைப்பாக அமையும் பணத்தை அறவிடுவதற்கென

வழக்கு மூலமாயினும் விண்ணப்ப மூலமாயினும் எழுத்தாணை மூலமாயினுஞ்சரி அத்தகைய ஆள் ஏதேனும் நீதிமன்றத்தில் வேறேதேனும் பரிகாரத்துக்கு உரித்துடையவராகார்.

9. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கியின் எவரேனும் அலுவலரால் அல்லது வேறு எவரேனுமாளினுல் ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப் படும் ஏதேனும் வழக்கில் அல்லது நடவடிக்கையில் அத்தகைய செயல் அல்லது விடயம் தொடர்பில் அல்லது அதிலிருந்து எடுக்கப்படும் செயல் அல்லது விடயம், அத்தகைய வழக்கில் அல்லது நடவடிக்கையில் அதற்கு முரணுனது நிரூபிக்கப்படும் வரையில் அத்தகைய அலுவலரால் அல்லது வேறு ஆளினுல் சட்டமுறையாகச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் எதனுலும் எழும் கடப் பாடுகளிலிருந்து எவரேனும் ஆளுக்கு அல்லது நிறுவனத்திற் குப் பொதுவான அல்லது சிறப்புக் கட்டளையினுல் விலக்களிப் பதற்கு மத்திய வங்கி இத்தால் தத்துவமளிக்கப்பட்டு அதிகார மளிக்கப்படுகின்றது.

11. (அ) இச்சட்டத்தின்கீழ்ப் பொய்யான அல்லது செம்மை யற்ற வெளிப்படுத்தலொன்றைச் செய்கின்ற அல் லது ஏதேனுமத்தகைய வெளிப்படுத்தலை வேறெவ ரேனுமாள் செய்ய உதவிசெய்கின்ற அல்லது உடந் தையாயிருக்கின்ற, அல்லது

(ஆ) ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் எவரேனுமலுவலர் அல்லது வேறெவரேனுமாள் இச் சட்டத்தின் கீழான ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியைப் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் தடை செய்கின்ற அல் லது வேறு ஆள் எவரேனும் தடை செய்ய, உதவி செய்கின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற, அல்லது

(இ) 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது வேறெவ ரேனும் அத்தகைய ஏற்பாடுகளை மீறுவதற்கு உதவி செய்கின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற, அல்லது

(ஈ) 12 ஆம் பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதே னும் பணிப்புடன் இணங்கியொழுகத் தவறுகின்ற

ஆளெவரேனும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதோடு நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்க விசா ரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து இரண் டாண்டுகால இருவகையிலொருவகை மறியலுக்கு ஆளாகுதல் வேண்டும்.

12. மத்திய வங்கியானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுற வலியுறுத்துவதனை இயல்வதாக்கும் நோக்கத்திற்குத் தேவையாகக்கூடிய அத்தகைய எல்லாத் தகவல்களையும் அப் பணிப்பில் குறிப்பிடப்பட வேண்டிய அத்தகைய காலத்தினுள் மத்திய வங்கிக்கு வழங்க வேண்டுமென வேறேதேனும் அட்ட வணைப்படுத்தப்பட்ட வங்கியைக் காலத்துக்காலம் பணிக் கலாம். அத்தகைய பணிப்புடன் இணங்கியொழுகுதல் அத்

தகைய வேறு அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் முகாமை யாளரது கடமையாதல் வேண்டும்.

*13.* மத்திய வங்கி அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியொன் ருகவிருப்பினும் இச்சட்டத்தின் கீழ் வைப்புப்பணங்களை ஏற் பதற்கு அல்லது வைத்திருப்பதற்கு மத்திய வங்கி கடப்பா டுடையதாயிருத்தலாகாது.

*14.* இச்சட்டத்தின் ஏற்பாடுகளானவை எல்லா நோக்கங் களுக்குமாக *1970*, ஒற்ரூேபர் *26* ஆந் திகதியன்று வலுவுடை யனவாகிவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*15.* இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்திஞலன்றி —

"மத்திய வங்கி" என்பது, நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்; அத்துடன்

"அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி" என்பது, மத்திய வங்கி அல்லது நாணய விதிச் சட்டத்தின் பொருளுக்குட் பட்ட வேறு ஏதேனும் வர்த்தக வங்கி அல்லது இலங்கைச் சேமிப்பு வங்கி எனப் பொருள்படும்.

# 1970ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க வங்கிப் பற்றுக்கள் வரி

**வர்த்தக வங்கிகளிலுள்ள நடைமுறைக் கணக்குகளில் வைக்கப்படும் பற்றுக்களின்மீது வரியொன்றை விதிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

(இசைவுத் திகதி 1970, நவெம்பர் 1)

1. இச்சட்டம் 1970ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க வங்கிப் பற்றுக்கள் வரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். என்பதுடன், அமைச்சர் அரசாங்கச் செய்தி மடலில் வெளியிடும் கட்டளைமூலம் நியமிக்கக்கூடிய அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) மூன்றும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு நடைமுறைக் கணக்கில் ஒவ்வொரு முழு மாதத்திலும் வைக்கப்படும் பற்றுக்களின் முழுத்தொகையின்மீதான ஒரு வரி, அத்தகைய தொகையின் ஒரு நூற்றுவீதத்தின் பத்திலொன்று என்ற வீதத்தில் அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானம் (பேராளர்) மூலம் காலத்திற்குக்காலம் துணியப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வீதத்தில் இறுக்கப்படுதல் வேண்டும்

(2) முதலாம் உட்பிரிவினால் அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட வரியொன்று, இச்சட்டத்தின்கண் இனிமேல் வரியென்று குறிப்பிடப்படும்.

3. நடைமுறைக் கணக்குகளில் வைக்கப்படும் பின்வரும் பற்றுக்கள் வரியினின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) இலங்கை அரசாங்கத்தின், ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின், ஐக்கிய நாடுகள் நிறுவகத்தின், அந் நிறுவகத்தின் ஏதேனும் சிறப்பான முகவர் நிலையத்தின், தெற்கு தென்கிழக்காசியாவிலுள்ள தொழில் நுட்பக் கூட்டுறவுப் பேரவையின் அல்லது அரசாங்க செய்தி மடலில் வெளியிடப்படுங் கட்டளைவாயிலாக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நாட்டாயிடை அல்லது வெளிநாட்டு நிறுவகத்தின் ஏதேனும் நடைமுறைக் கணக்கில் வைக்கப்படும் பற்றுக்கள் ;

(ஆ) வர்த்தக வங்கி ஒன்றின் இலங்கையிலுள்ள ஒரு கிளையில் பேணப்பட்டுவருவதான அவ்வங்கியின் இலங்கையிலுள்ள தலைமை அலுவலகத்தின் ஏதேனுமத்தகைய நடைமுறைக்கணக்கில் வைக்கப்படும் பற்றுக்கள் ;

(இ) வர்த்தக வங்கி ஒன்றின் இலங்கையிலுள்ள தலைமை அலுவலகத்தில் பேணப்பட்டு வருவதான அவ்வங்கியின் இலங்கையிலுள்ள கிளையொன்றின் ஏதேனுமத்தகைய நடைமுறைக்கணக்கில் வைக்கப்படும் பற்றுக்கள் ;

(ஈ) வர்த்தக வங்கி ஒன்றின் இலங்கையிலுள்ள வேறேதேனும் கிளையில் பேணப்பட்டுவருவதான அவ்வங்கியின் இலங்கையிலுள்ள கிளையொன்றின் ஏதேனுமத்தகைய நடைமுறைக்கணக்கில் வைக்கப்படும் பற்றுக்கள் ;

(உ) வரியினைக் கொடுப்பனவு செய்வதற்காக நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தொகைகள் தொடர்பில் அக்கணக்கில் வைக்கப்படும் பற்றுக்கள் ;

(ஊ) சிறப்பு நடைமுறைக்கணக்கொன்றைத் திறக்கும் நோக்கத்திற்காக நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து எடுக்கப்பட்டனவும் அத்தகைய சிறப்பு நடைமுறைக்கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டனவுமான எவையேனும் பணத்தொகைகள் தொடர்பில் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்ட பற்றுக்கள் ;

(எ) சிறப்பு நடைமுறைக்கணக்கொன்றில் வைக்கப்பட்ட பற்றுக்கள் ;

(ஏ) அரசாங்கச் செய்தி மடலில் வெளியிடப்படுங் கட்டளை மூலம் நிதியமைச்சரினால் காலத்துக்காலம் துணியப்படக்கூடியவாறான நடைமுறைக் கணக்குகளில் பற்று வைக்கப்பட்ட அத்தகைய வேறு பற்றுக்கள் அல்லது பற்றின் வகைகள்.

4. ஏதேனும் முழு மாதத்தின்போது யாரேனுமாளின் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்ட பற்றுக்களின்மீதான வரியினைக் கொடுப்பதற்கான பொறுப்பு அம்மாத முடிவில் தொடங்குதல் வேண்டுமென்பதோடு அவர், அவ்வரியினைக் கொடுக்க ஆளாதலும் வேண்டும்.

5 (1) ஒவ்வொரு முழு மாதமும் முடிவடைந்ததன்பின்னர் முப்பது நாட்களுக்குள், ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அவ்வங்கியிற் பேணப்பட்டுவரும் ஒவ்வொரு நடைமுறைக்கணக்கிலும் உள்ள நிதிகளுக்கேற்ப, அம்மாதத்தில் அக்கணக்கில் வைக்கப்பட்ட பற்றுக்களின்மீதான வரிக்கு அல்லது வரியின் பகுதிக்குச் சமமான பணத்தொகையொன்றை அக்கணக்கிலிருந்து எடுத்தல் வேண்டும்; அத்துடன், இவ்வுட்பிரிவினைப் பின்பற்றி எடுக்கப்பட்ட பணத்தொகைகளிலிருந்து 6ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டணத் தொகையினைக் கழித்ததன்பின்னர், அத்தகைய பணத்தொகையின் மீதியினை, விதிக்கப்பட்ட படிவத்தில் அது தொடர்பிலான கூற்றென்றுடன், இலங்கைத் திரட்டு நிதியில் வரவு வைக்கப்படுவதற்கென இலங்கை மத்திய வங்கித் தலைமைக் கணக்காளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) வரியைக் கொடுப்பனவு செய்வதற்காக ஒரு நடைமுறைக் கணக்கிலிருந்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணத்தொகை எடுக்கப்பட்டு. அனுப்பப்படுமிடத்து அத்தகைய கொடுப்பனவு, அத்தகைய கணக்கு எந்த ஆளுக்காகப் பேணப்பட்டு வருகின்றதோ அந்த ஆளின் அதிகாரத்துடன் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு அவ்வாறனுப்பப்பட்ட வரித்தொகையினைக் கொடுத்ததற்கான அவரது பொறுப்பின் செல்லுபடியான விடுவிப்பாதலும் வேண்டும்.

(3) நடைமுறைக்கணக்கொன்றில் நிதிகள் இல்லாத காரணத்தினல் அல்லது அவை போதாத காரணத்தினல், அக்கணக்குப் பேணப்பட்டு வரும் வர்த்தக வங்கி ஏதேனும் முழு மாதத்தில் அக்கணக்கில் வைக்கப்பட்ட பற்றுக்களினமீதான வரியை அல்லது அதன் ஏதேனும் பகுதியைச் சேகரிக்க முடியாதிருக்கின்றவிடத்து அவ்வங்கியானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான கூற்றினை அனுப்பும்போது, எந்த ஆளுக்காக அக்கணக்குப் பேணப்படுகின்றதோ அந்த ஆளின் பெயரையும் முகவரியையும், அக்கணக்குத் தொடர்பில் சேகரிக்கப்படாத வரியின் தொகையையும், சேகரிக்கப்படாத அந்த வரித்தொகை எந்தப் பற்றுக்களின் மீது வருமதியாகவுள்ளதோ அந்தப்பற்றுக்களின் தொகையையும், விதிக்கப்பட்ட படிவத்தில் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளது எதுவும், நடைமுறைக் கணக்கொன்றில் வைக்கப்பட்ட பற்றுக்களின் மீதான வரி அல்லது வரியின் ஏதேனும் பகுதி கொடுக்கப்படவுள்ளது என்ற காரணத்திற்காக, அக்கணக்கு எந்த ஆளுக்காகப் பேணப்படுகின்றதோ அந்த ஆள் காசோலை, உடனுண்டியல், கட்டளை அல்லது வேறு அறிவுறுத்தல் மூலம் கோரும் தொகையின் முழுமையை அல்லது அதன் பகுதியை அக்கணக்கிலுள்ள நிதிகளிலிருந்து கொடுப்பனவு செய்ய மறுப்பதற்கு வர்த்தக வங்கியொன்றை அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது.

6. ஒவ்வொரு வர்த்தக வங்கியும், ஏதேனும் முழு மாதத் தொடர்பில் வரிக் கொடுப்பனவுக்காகச் சேகரிக்கப்பட்ட முழுத் தொகையிலிருந்து, விதிக்கப்படக்கூடியவாறன அத்தகைய கட்டணத்தை வரியினைச் சேகரிக்கும் செலவுத்தொகையாகவும் அனுப்பும் செலவுத்தொகையாகவும், கழித்து, அத்தொகையை வைத்திருக்கலாம்.

7. யாரேனுமாளின் நடைமுறைக்கணக்கில் ஏதேனும் முழு மாதத்தில் வைக்கப்பட்ட பற்றுக்களின்மீதான வரியின் ஏதேனும் தொகையினை வர்த்தக வங்கியொன்று சேகரிக்க முடியாதிருக்கின்றதென 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அது அறிக்கை செய்யுமிடத்து, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அவ்வங்கியின் அலுவலரொருவர், இலங்கைத் திரட்டுநிதியின் வரவு வைக்கப்படுவதற்கென இலங்கை மத்திய வங்கிக்கு அத்தகைய தொகையினை, அக்கட்டளையின் திகதியின் பின்னர் பதினன்கு நாட்களுக்குள் கொடுக்குமாறு அத்தகைய ஆளுக்கு எழுத்தில் கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய ஆள் அத்தகைய பதினன்கு நாட்களுள் இலங்கை மத்திய வங்கிக்கு அத்தகைய தொகையினைக் கொடுக்கத் தவறின், அத்தகைய தொகை தவறுகைக்குள்ளாய தொகையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு அவரது சொத்துக்கள் எல்லாவற்றின் மீதும் அது பொறுப்பொன்ருதலும் வேண்டும்.

8. ஏதேனும் தொகை தொடர்பில் வரியானது தவறுகைக்குள்ளாயவிடத்து, இறைசேரிப் பிரதிச் செயலாளர் அத்தகைய தொகை, தவறுக்குள்ளானவரின் பெயர், கடைசியாக அறியப்பட்ட வதிவிடம் அல்லது தொழிலிடம் என்பனவற்றின் விபரங்களடங்கிய சான்றிதழொன்றை அத்தகைய இடம்

அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதவானெருவருக்கு வழங்கலாம். அந்நீதவானுனவர் அதன்மேல் அத்தகைய தவறுக்குள்ளாயவரைத் தம்முன் அழைத்து, அவருக்கெதிராக, தவறுகைக்குள்ளாய தொகையினை அறவிடுதற்காக ஏன் நடவடிக்கைகள் எடுத்தலாகாதெனக் காரணங் காட்டுமாறு கேட்டல் வேண்டும். அத்துடன், போதிய காரணம் காட்டப்படவில்லையாயின், தவறுகைக்குள்ளாய வரித் தொகை, அத்தவறுக்குள்ளாயவரின்மீது நீதவானினல் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றென்றுற்போன்று நீதவானின் கட்டளை மூலம் அறவிடப்படுதல்வேண்டும். அவ்வாறு அறவிடப்பட்டதன்பின்னர், இலங்கைத் திரட்டுநிதியில் வரவுவைக்கப்படுவதற்கெனத் திறைச்சேரிப் பிரதிச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

9. (1) மூன்றும் பிரிவினல் அல்லது அப்பிரிவின்கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவாறுன எவையேனுமத்தகைய பற்றுக்களின்மீதான வரியாக யாரேனும் ஆளினல் ஏதேனும் தொகை கொடுக்கப்பட்டவிடத்து அல்லது அவர் சார்பில் கொடுக்கப்பட்டவிடத்து அல்லது அவரிடமிருந்து அறவிடப்பட்டவிடத்து, அத்தகைய ஆள், அதன்சார்பில் எழுத்திலான கோரிக்கையொன்றினைத் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குச் செய்ததன்மேல் அத்தகைய தொகையினை மீளப்பெற உரித்துடையவராவார்.

(2) முதலாமுட்பிரிவின்கீழ் யாரேனுமாளுக்குக் கொடுபடவேண்டிய ஏதேனும் பணத்தொகை இலங்கைத் திரட்டுநிதியிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

10. (1) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அவ்வங்கியின் யாரேனுமலுவலர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடிய அத்தகைய திரட்டுக்களைச் சமர்ப்பிக்குமாறு வர்த்தக வங்கிகளைப் பணிக்கலாமென்பதோடு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அத்தகைய வங்கிகள் இணங்கியொழுகுகின்றனவா அல்லவா எனக் கண்டறியும் நோக்கத்திற்காக அத்தகைய வங்கிகளின் புத்தகங்களிலும், பதிவேடுகளிலும், மற்றெல்லா ஆவணங்களிலுமுள்ள எவையேனும் பதிவுகளைப் பார்வையிடலாம். அத்துடன் அவற்றின் படிகளையும் எடுக்கலாம்.

(2) ஒவ்வொரு வர்த்தக வங்கியும் முதலாமுட்பிரிவின்கீழ்க் கொடுக்கப்படும் ஏதேனும் 'பணிப்புரைக்கிணங்கியொழுகுதல் வேண்டுமென்பதோடு முதலாமுட்பிரிவினல் அவ்வாறு செய்ய அதிகாரமளிக்கப்பட்ட யாரேனுமாள் அத்தகைய வங்கியின் எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் என்பவற்றைப் பார்வையிடவும், அவற்றின் படிகளை எடுக்கவும் அனுமதித்தலும் உதவிசெய்தலும் வேண்டும்.

(3) இரகசியத்தைப் பேணவேண்டியது கடமை தொடர்பிலான நாணயச் சட்டத்தின் 45ஆம்பிரிவு, முதலாமுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறுன இலங்கை மத்திய வங்கியின் யாரேனுமத்தகைய அலுவலர் அவ்வுட்பிரிவின்கீழ்த் தமது கடமைகளைப்புரியும்போது அவரது அறிவுக்கெட்டிய கருமங்கள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

*11.* நடைமுறைக் கணக்கொன்று எந்நோக்கத்துக்காக மாத்திரம் பேணப்படவேண்டுமோ அந்நோக்கத்துக்காகச் சிறப்பு நடைமுறைக்கணக்கொன்று தேவைப்படுகின்றதென ஒருவர் எழுத்தில் வெளிப்படுத்தினராயின், அது இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான சிறப்பு நடைமுறைக்கணக்கொன்ருக இருப்பின் அவருக்காக வர்த்தக வங்கியொன்று சிறப்பு நடைமுறைக் கணக்கொன்றைத் திறக்கலாம்.

*12.* (*1*) சிறப்பு நடைமுறைக்கணக்கொன்றைத் திறக்கும் நோக்கத்திற்காக வர்த்தக வங்கியொன்றுக்குத் தவருன வெளிப்படுத்தலொன்றைச் செய்யும் யாரேனுமாள் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்க விசாரணையின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டுக்குமிகாத இரண்டிலொரு வகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(*2*) சிறப்பு நடைமுறைக்கணக்கொன்றினைத் திறப்பதற்காகத் தவருன வெளிப்படுத்தலொன்றைச் செய்ததற்காக, முதலாமுட்பிரிவின்கீழ்,யாரேனுமாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நீதிமன்றமானது, வேறேதேனும் தீர்ப்போடுகூட, அத்தகைய கணக்கு சிறப்பு நடைமுறைக்கணக்கொன்ருக இல்லாது நடைமுறைக்கணக்கொன்ருகவிருந்திருப்பின் அத்தகைய கணக்கில் வைக்கப்பட்ட பற்றுக்களின்மீது கொடுபடக்கூடியனவாய் இருக்கக்கூடிய வரித்தொகைக்குச் சமமானதென நீதிமன்றத்தினுல் காணக்கூடியவாருன அத்தகைய பணத்தொகையினை அவரைக் கொடுக்குமாறு பணித்தல் வேண்டும்; அத்துடன் எந்த வர்த்தக வங்கியில் அக்கணக்குப் பேணப்பட்டு வந்ததோ அந்த வர்த்தக வங்கிக்கு, அக்கணக்கை மூடும்படி பணித்தல் வேண்டும்; அவ்வங்கி அக்கட்டளைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ்க் கொடுபடவேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை, அது நீதிமன்றத்தினுல் விதிக்கப்பட்ட குற்றமொன்ருற்போன்று நீதிமன்றத்தின் கட்டளைமூலம் அறவிடப்படலாம். அத்துடன் அவ்வாறறவிடப்பட்டதும், இலங்கைத் திரட்டுநிதியில் வரவுவைக்கப்படுவதற்கெனத் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*13.* ஏதேனும் வர்த்தக வங்கியில் பேணப்பட்டுவரும் ஏதேனும் சிறப்பு நடைமுறைக்கணக்கு உள்ளபடி அத்தகைய ஒரு கணக்கல்லவென நிதியமைச்சர் திருத்திப்பட்டவிடத்து, அவர், அக்கணக்கினை மூடுமாறு அவ்வங்கிக்கு எழுத்தில் கட்டளையிடலாம். அவ்வங்கி அக்கட்டளைக்கிணங்கியொழுகுதல் வேண்டும்.

*14.* ஏதேனும் வர்த்தக வங்கி, இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறுமிடத்து அல்லது அவற்றை மீறுமிடத்து, அத்தகைய வங்கியின் முகாமையாளர்அல்லது வேறு முதன்மை நிறைவேற்றலலுவலர் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதவானொருவர் முன்னரான சுருக்கவிசாரணையின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராயிரம் ரூபாவுக்குமிகாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்குமிகாதவொரு காலத்திற்கு இரண்டிலொருவகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

*15.* ஒவ்வொரு மூன்று முழு மாதங்கள் முடிவடைந்ததன் பின்னரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், ஒவ்வொரு வர்த்தகவங்கி தொடர்பிலும், வரிக்கு உட்படக்கூடியவாறுன அவ்வர்த்தக வங்கியின் நடைமுறைக்கணக்குகளில் அம்மாதங்களின்போது வைக்கப்பட்ட அத்தகைய பற்றுக்களின் முழுத் தொகையையும், அப்பற்றுக்களின் மீது கொடுபடற்பாலதான வரியின் முழுத்தொகையையும், வரியின் கொடுப்பனவு சார்பில் அவ்வர்த்தக வங்கியினுல் அனுப்பப்பட்ட தொகையையும், வரியினைச் சேகரிப்பதற்கும் அனுப்புவதற்குமான அதன் கட்டணமாக அவ்வர்த்தக வங்கியினுல் எடுக்கப்பட்ட தொகையையும், சேகரிக்கப்படாத வரித்தொகை, ஏதேனுமிருப்பின், அதன் தொகையையும் எழுத்தில் அவ்வாளுநருக்குச் சான்றளித்தல் வேண்டும். அச்சான்றிதழ் எம் முழுமூன்று மாதங்கள் பற்றிக் கூறுகின்றதோ அம்முழு மூன்று மாதங்கள் முடிந்ததன்பின்னர் நாற்பத்திநான்கு நாட்களுக்குள் அத்தகைய சான்றிதழ். அத்தகைய ஆளுநரினுல், திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் வெளியூர்க் கிளைகள் ஒவ்வொன்றும் தொடர்பில், அத்தகைய சான்றிதழ் அக்கிளையின் முகாமையாளரது கையொப்பத்தைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்; அத்துடன், அம்முகாமையாளர், அத்தகைய சான்றிதழை, அதன் படியொன்றுடன் சேர்த்து, அத்தகைய சான்றிதழ் எந்த மூன்று பஞ்சாங்க மாதங்கள் பற்றியதோ அந்த மூன்று மாதங்கள் முடிவடைந்த பிறகு முப்பது நாட்கள் முடிவுபெறுமுன்னர் மேற்கூறப்பட்ட ஆளுநருக்கு, அனுப்புதல்வேண்டும்.

இப்பிரிவினில், ''வெளியூர்க் கிளை'' என்பது இலங்கையில், கொழும்பு மாநகரசபையின் நிருவாக எல்லைக்குள் இருக்கும் பகுதிக்கு வெளியில் அமைந்துள்ள ஒரு கிளையெனப் பொருள் படும்; அத்துடன்

*16.* *(1)* நிதியமைச்சர் இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

*(2)* முதலாமுட்பிரிவினுல் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி இச்சட்டத்தினுல் விதிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எக்கருமத் தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

*(3)* இப்பிரிவின் கீழாக்கப்படும் ஒழுங்குவிதிகள் எவையும் அரசாங்க செய்தி மடலில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு அவ்வொழுங்குவிதிகளில் நடைமுறைக்கு வருந்திகதியென விதிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய திகதி எதுவும் அவ்வாறு விதிக்கப்படவில்லையாயின், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழாக்கப்பட்டு வெளியிடப்படும் ஒழுங்கு விதியொவ்வொன்றும், வசதியானவரை கூடியவிரைவில், நாடாளுமன்ற மூதவைமுன்னரும் மக்கள் பேராளர் பிரதிநிதிகள் சபை முன்னரும் அவ்விரு சபைகளினதும் அடுத்துவரும் இரு கூட்டங்களின்போதும் வைக்கப்படுதல் வேண்டுமென்பதோடு அவ்விரு சபைகளினதும் அடுத்து நிகழ் கூட்டத்தில், அத்தகைய ஒழுங்குவிதியினை அங்கீகரிக்க மறுத்தலாகாதென்ற பிரேரணை மூலம் கொணரப்படுதல் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதி மூதவையினால் அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபையினால் அங்கீகரிக்கப்பட மறுக்கப்படுமாயின், அத்தகைய ஒழுங்குவிதி, அதன்கீழ் ஏற்கெனவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அங்கீகாரம் மறுக்கப்பட்டமை பற்றிய அறிவித்தல் அரசாங்கச் செய்தி மடலில் வெளியிடப்படுதல் வேண்டும்.

17. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தி நின்றாலன்றி — பொருள்கோடல்.

''வர்த்தக வங்கி'' என்பது நாணயச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியென்று பொருளாவதோடு வர்த்தக வங்கியொன்றின் இலங்கையிலுள்ள ஒவ்வொரு கிளையினையும் உள்ளடக்கும்; அத். 422.

''நடைமுறைக்கணக்கு'' என்பது —

(அ) யாரேனுமாளுக்காக வர்த்தக வங்கியொன்றிற் பேணப்படுவதும், காசோலை, உடனுண்டியல், கட்டளை அல்லது வேறு அறிவுறுத்தல் மூலம் அவராற் கேட்கப்படும்போது கொடுப்பனவுகள் செய்யப்படுவதுமான, வரவிலுள்ளதாயினுஞ் சரி, வேறுவிதமானதாயினுஞ் சரி, (சேமிப்புக் கணக்கொன்று தவிர்ந்த) கணக்கொன்றென்று, அத்துடன்

(ஆ) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யும் அல்லது ஏதேனும் கட்டிடத்தைக் கட்டியமைக்கும் செலவு போன்ற மூலதனத் தன்மையான செலவுகள் உட்பட, வர்த்தக வங்கியொன்றின் எவையேனும் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகக் கொடுப்பனவுகள் செய்யப்படும் அவ்வங்கியிலுள்ள ஏதேனும் உட்கணக்கென்று,

பொருளாகும் ;

''பற்றுக்கள்'' என்பது, யாரேனுமாளின் காசோலை, உடனுண்டியல், கட்டளை அல்லது வேறு அறிவுறுத்தல் மூலம் அவரது நடைமுறைக்கணக்கொன்றிலிருந்து நிதிகளை எடுத்தல் தொடர்பில் அவ்வாளின் அக்கணக்கில் வைக்கப்படும் பதிவுகளென்று பொருளாவதோடு, வியாபாரத்தின்போது வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் நடைமுறைக் கணக்கில் அவ்வங்கியினால் செய்யப்பட்ட அறவீடுகளையும் உள்ளடக்கும்;

"சேமிப்புக்கணக்கு" என்பது, வர்த்தக வங்கியொன்றிற் பேணப்படுவதும், அதில் வைக்கப்பட்ட நிதிகளுக்கு வட்டி கொடுப்பதும், விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளின் பின்னர் அல்லது அவ்வங்கியினால் ஆக்கப்பட்டவாறான அத்தகைய விதிகளுக்கமைய மட்டுமே அதிலிருந்து நிதிகள் எடுக்கப்படக்கூடியதுமான ஒரு கணக்கென்று பொருளாகும்;

"சிறப்பு நடைமுறைக்கணக்கு" என்பது,

(அ) யாரேனுமாளினால் அவரது தொழிலின்போது வேறு யாரேனுமாட்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்காக அவ்வாட்களுக்காகவும் அவர்கள் சார்பிலும் அவரினால் பெறப்பட்ட நிதிகளை நடைமுறைக்கணக்கொன்றில் போட்டுவைக்கும் நோக்கத்திற்காகவும்,

(ஆ) அவ்வாட்களுக்கு அக்கணக்கிலுள்ள நிதிகளிலிருந்து கொடுப்பனவு செய்யும் நோக்கத்திற்காகவும் —

மட்டும் பேணப்படும் நடைமுறைக்கணக்கொன்றென்று பொருளாகும்.

## (ஆ) 1970ஆம் ஆண்டில் நாணயச் சபையினுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக நடவடிக்கைகள்

*சுற்றறிக்கை எண். 33/3*

*இலங்கை மத்திய வங்கி,*
*அ. பெ. 590,*
*கொழும்பு-1.*
*1970, சனவரி 3.*

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

*1969ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி வெளிவந்த 33 எண் தாங்கிய சுற்றறிக்கையினதும், 1969ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆந் திகதி வெளிவந்த 33/1 எண் தாங்கிய சுற்றறிக்கையினதும் ஏற்பாடுகள் 1970ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30ஆந் திகதிவரை நடைமுறையிலிருக்குமென்பது இத்தால் வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

**க குணரத்தினம்,** *முதன்மைக் கணக்காளர்.*

**டபிள்யூ. தென்னக்கோன்,** *ஆளுநர்.*

சுற்றறிக்கை எண். 34

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு-1.
1970, சனவரி 10.

**முற்பணங்களின் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதங்கள்**

(நாணய விதிச் சட்டப் பிரிவுகள் 83, 87ஐப் பார்க்கவும்)

1. 1970ஆம் ஆண்டு சனவரி மாதம் 11ஆந் திகதி தொடக்கம், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகளை அடைமானப் பிணையாகக் கொண்டு மத்திய வங்கியினுல் வர்த்தக வங்கிகளுக்கு அளிக்கப்படும் முற்பணங்களின் மீதான வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு $6\frac{1}{2}$ சதவீதமாகும்.

2. 1970ஆம் ஆண்டு சனவரி மாதம் 11ஆந் திகதி தொடக்கம் வர்த்தக உற்பத்திக் கடன்கள் தொடர்பான சலுகை விடுப்புக்கால உறுதிமொழிக் கடன் பத்திரங்களை அடைமானப் பிணையாகக்கொண்டு மத்திய வங்கியினுல் வர்த்தக வங்கிகளுக்கு அளிக்கப்படும் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு $6\frac{1}{2}$ சதவீதமாகும்.

3. 1968, மே மாதம் 5ஆந் திகதிய சுற்றறிக்கை எண் 26 இத்தால் விலக்கப்பட்டிருக்கிறது.

**க. குணரத்தினம்,**
முதன்மைக் கணக்காளர்.

**டபிள்யூ. தென்னக்கோன்,**
ஆளுநர்.

சுற்றறிக்கை எண். 35

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. எண். 590,
கொழும்பு-1.
1970, சனவரி 10.

**மீள நிதியிடல் — நடுத்தவணை, நீண்ட தவணைக் கொடுகடன் மீதான வட்டி வீதங்கள்.**

தொடர்பு : நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ(1) (இ) (1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 67ஆம் பிரிவினல் ஏற்படுத்தப்பட்டபடி).

கொடுகடன் நிலையங்களுக்கு மத்திய வங்கியினல் வழங்கப்படும் மீள நிதியிடல் கடன்களின்மீதான வட்டிவீதம் 1970ஆம் ஆண்டு சனவரி மாதம் 11ஆம் திகதி முதல் நடைமுறையிலிருக்கும். இதன்படி;

(அ) வேளாண்மை அல்லது கைத்தொழிலின் உயர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டொன்றிற்கு $6\frac{1}{2}$ சதவீதமாகும். ஆயின் இது, இவ்வசதிகளைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலையங்கள், தமது வாடிக்கைக்காரர்களுக்குத் தம்மால் வழங்கப்பட்டதும், அதன் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீள நிதியிடல் கோரப்படுவதுமான கடன்களின் மேல் ஆண்டொன்றுக்கு $9\frac{1}{2}$ சதவீதத்திற்கு மேல் அறவிடாதிருத்தல் வேண்டும்.

(ஆ) தேயிலை ஆலைகளின் புதிய முறையாக்கலுக்கு அத்துடன் / அல்லது புதிய தேயிலை ஆலைகள் நிறுவுவதற்கு உரிய கடன்களின் வட்டியில் ஒரு பகுதியைத் தேயிலைக் கட்டுப்பாட்டாளர் பொறுக்குமிடத்து வட்டி வீதம் ;–

(1) அத்தகைய தேயிலை ஆலையின் புதிய முறையாக்கலுக்கு அத்துடன் / அல்லது புதிய தேயிலை ஆலைகள் நிறுவுவதற்குள்ள உள்ளூர்ச் செலவுகளை ஈடுசெய்வதற்குரிய மீளநிதியிடற் கடன்களிற்கு ஆண்டொன்றுக்கு 5 சதவீதமாகும். ஆயின் இது, இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலையங்கள், தமது வாடிக்கைக்காரர்களுக்குத் தம்மால் வழங்கப்பட்டதும், இதன் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீள நிதியிடல் கோரப்படுவதுமான கடன்களின் பேரில் ஆண்டொன்றுக்கு $8\frac{1}{2}$ சதவீதத்துக்கு மேல் அறவிடாது இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தேயிலை ஆலையின் புதிய முறையாக்கலுக்கு அத்துடன்/அல்லது புதிய தேயிலை ஆலைகள் நிறுவுவதற்குள்ள வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளை ஈடுசெய்வதற்குரிய மீளநிதியீட்டற் கடன்களிற்கு ஆண்டொன்றுக்கு 7 சதவீதமாகும். ஆயின் இது, இவ்வசதிகளைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலையங்கள் தமது வாடிக்கைக்காரர்களுக்குத் தம்மால் வழங்கப்பட்டதும், இதன் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீளநிதியிடலைக் கோரப்படுவதுமான கடன்களின் பேரில் ஆண்டொன்றுக்கு $8\frac{1}{2}$ சதவீதத்திற்கு மேல் அறவிடாதிருத்தல் வேண்டும்.

(இ) வாணிபம், வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் உயர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டொன்றுக்கு $7\frac{1}{2}$ சதவீதமாகும்.

1969, ஒகத்து 19ஆந் திகதிய 29/1 ஆம் இலக்கச் சுற்றறிக்கை இத்தால் இல்லாதாக்கப்படுகிறது.

**க. குணரத்தினம்,**
முதன்மைக் கணக்காளர்.

**டயிள்யூ. தென்னக்கோன்,**
ஆளுநர்.

சுற்றறிக்கை எண். 36

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு-1.
1970, சனவரி 29.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

1970ஆம் ஆண்டு யூலை மாதம் 31ஆந் திகதி வரை, 1969 மே 12இல் வெளி வந்த எண் 33 தாங்கிய சுற்றறிக்கையினதும், 1969 யூன் 13இல் வெளி வந்த சுற்றறிக்கையினதும் ஏற்பாடுகள் நடைமுறையிலிருக்குமென்பது இத்தால் வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

**க. குணரத்தினம்,**
முதன்மைக் கணக்காளர்.

**டபிள்யூ. தென்னக்கோன்,**
ஆளுநர்.

சுற்றறிக்கை எண். 37

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு-1.
1970, மே 29.

**வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களின்
கொடுக்கல் வாங்கல்கள்.**

செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்கு வெளிநாட்டுச் செலாவணி அனுப்புவதற்கு அல்லது முதிர்ச்சிபெற்ற இறக்குமதி உண்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழ்கள் தவிர்த்து, உடன்மாற்றில் அல்லது பின்மாற்றில் வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழ்கள் விற்பனை பற்றிய அறிவித்தலை மீண்டும் அறிவிக்கும்வரை அவை நிறுத்தி வைக்கப்படல் வேண்டும் என்று இத்தால் வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

**க. குணரத்தினம்,**
முதன்மைக் கணக்காளர்.

**டபிள்யூ. தென்னக்கோன்,**
ஆளுநர்.

சுற்றறிக்கை எண். 38

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. எண். 590,
கொழும்பு-1.
1970, யூலை 31.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

1969, மே 12ஆந் திகதிய 33ஆம் இலக்கச் சுற்றறிக்கையினதும், 1969 யூன் 13ஆந் திகதிய 33/1 ஆம் இலக்கச் சுற்றறிக்கையினதும் ஏற்பாடுகள் மேலும் அறிவித்தல் கொடுக்கும்வரை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்குமென வர்த்தக வங்கிகள் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

**க. குணரத்தினம்,**
முதன்மைக் கணக்காளர்.

**டபிள்யூ. தென்னக்கோன்,**
ஆளுநர்.

சுற்றறிக்கை எண். 39

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ எண். 590,
கொழும்பு-1.
1970, திசெம்பர் 15.

**இறக்குமதிக் கொடுகடன் பத்திரங்களுக்கு எதிரான வர்த்தக வங்கிக் கொடுகடன் எல்லைத் தேவைகள்**

1969 சனவரி 30ஆந் திகதிய 30 எண் தாங்கிய சுற்றறிக்கையையும், 1969 பெப்புருவரி 26ஆந் திகதிய 30/1 எண் தாங்கிய சுற்றறிக்கையையும் பார்க்கவும்.

சுமை உந்து வண்டிகளின் அடிச்சட்டம் இறக்குமதிகளுக்குரிய கொடுகடன் பத்திரங்களுக்கெதிரான எல்லைத் தேவைகள் பற்றிய நிபந்தனைகள் இப்பொழுது நடைமுறையிலில்லையென்று இத்தால் வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

1969 சனவரி 30ஆந் திகதிய 30 எண் தாங்கிய சுற்றறிக்கையும் 1969 பெப்புருவரி 26ஆந் திகதிய 31/1 எண் தாங்கிய சுற்றறிக்கையும் இத்தால் நீக்கப்பட்டுள்ளன.

**க. குணரத்தினம்,**
முதன்மைக் கணக்காளர்.

**டபிள்யூ. தென்னக்கோன்,**
ஆளுநர்.